


14.10. 2024 – 1.45 PM

தலைப்புச் செய்திகள்

- இந்தியா, அல்ஜீரியா பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.
- 5-ஜி தொலைத்தொடர்பு சேவைகள் அனைத்து மாநிலங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையில் இன்று ஆய்வுமேற்கொண்டார்.
- ிசென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட பள்ளி கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவித்து முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.
- ராமநாதபுரம் தொடங்கி திருவள்ளூர் வரையிலான கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- அல்மாட்டி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரித்விக் அர்ஜுன்கதே இணை இன்று பிற்பகல் - இத்தாலி, பின்லாந்து இணையை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

இந்தியா, அல்ஜீரியா பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

7 நாள் அரசுமுறை பயணமாக ஆப்பிரிக்க நாடுகளுக்கு சென்றுள்ள குடியரசு தலைவர், அல்ஜீரிய தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ஆப்பிரிக்க நாடுகளுடன் சுமூகமான நட்புறவை நோக்கமாக கொண்டு குடியரசு தலைவரின் பயணம் அமைந்துள்ள நிலையில் 2-வது கட்டமாக நாளைமறுநாள் மொரிட்டேனியாவிற்கு அவர் செல்கிறார்.

அதனைத் தொடர்ந்து 17, 19-ம் தேதிகளில் மலாவி நாட்டிற்கு குடியரசு தலைவர் பயணம் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

ஜோதிர் ஆதியத்திய சிந்தியா

நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் 80 சதவிகித மக்கள் பயன்பெறும் வகையில், 5-ஜி தொலைத்தொடர்பு சேவைகள் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்திய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 5-வது உலகளாவிய தர நிர்ணய கருத்தரங்கில் இன்று துவக்கவுரையாற்றிய அவர், 2040-ஆம் ஆண்டு வாக்கில், 450 மில்லியன் டாலர் பொருளாதாரத்திற்கு இச்சேவை வழிகோலும் என்றார்

புதிய தொழில்நுட்பங்களால் உலகளாவிய தர நிர்ணயம் தொடர்பான ஒருமித்த கருத்தொற்றுமைக்கு இக்கருத்தரங்கு பயனளிக்கும் என்றார்.

செயற்கை நுண்ணறிவு, பொலிவுறு நகரம், தொழில்நுட்ப வளங்கள், விநியோக சங்கிலி போன்றவற்றின் எதிர்கால நுட்பங்களை நோக்கி நாடு முன்னேறுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக பிரதமர் திரு.நரேந்திர மோடி, சர்வதேச தொலைத்தொடர்பு தர நிர்ணய மாநாட்டை நாளை தொடங்கிவைப்பார் என்று தொலைத்தொடர்பு அமைப்பின் சர்வதேச தலைமை இயக்குநர் டொரின் பொக்தான் மார்டின் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ஜே.பி. நட்டா

சர்வதேச ஒற்றுமை உணர்வே உலக சுகாதாரத்திற்கான இந்தியாவின் அணுகுமுறையாக திகழ்கிறது என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் மருந்து ஒழுங்குமுறை ஆணைய சர்வதேச மாநாட்டை இன்று துவக்கி வைத்து பேசிய அமைச்சர், வலிமையான உலகை வடிவமைக்க இந்தியா உறுதியுடன் செயலாற்றுவதாக சுட்டிக்காட்டினார்.

அறிவுத்திறன் பரிமாற்றத்திற்கான தளமாக மருந்து ஒழுங்குமுறை ஆணையம் திகழ்வதோடு அனைத்து நாடுகளிலும் பின்பற்றப்படும் சிறந்த பயிற்சிகளின் பரிவர்த்தனைகளுக்கும் இது வழிகோலுவதாக குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின் பரிந்துரைகளை ஒருங்கிணைத்து உறுதியான சுகாதார கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றார்.

இந்த 5 நாள் மாநாட்டில் சீர்த்திருத்தங்கள், தரமேம்பாடு, புதுமையான தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

சக்தி காந்ததாஸ்

உயர்தரம் வாய்ந்த மின்னனு நிதிசார் உற்பத்தி பொருட்களுக்கு நம் நாட்டின் உலகளாவிய மின்னனு பொது கட்டமைப்பு பயனளிப்பதாக ரிசர்வ் வங்கி ஆளுநர்
திரு. சக்தி காந்ததாஸ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ரிசர்வ் வங்கியின் உயர் நிலை மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், உலகளாவிய 3-வது எழுச்சிமிகு ஸ்டார்அப் சுற்றுசூழல் நாடாக நம்நாடு திகழ்வதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் இந்தியாவின் துடிப்பான அனுபவத்தின் மூலம் உலகளவில் மின்னனு புரட்சியை ஏற்படுத்த பிற நாடுகள் முன்வர வேண்டுமென கோரினார்.

மத்திய வங்கி டிஜிட்டல் கரன்சிகளை தொடங்கியுள்ள சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று அவர் பெருமிதம் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு சவால்களை எதிர்கொள்ள நிதி நிறுவனங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உலகளிவில் கோவிட்டுக்கு பிந்தைய கடன் சூழல் அதிகரித்துள்ளது குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த பொருளாதர நாடுகளின் கடன் மற்றும் உள்நாட்டு உற்பத்தி விகிதம் அதிகரித்து வருவதை எடுத்துரைத்த அவர், இதன் நிலைத்தன்மை குறித்தும், பொருளாதாரத்தில் இதன் தாக்கம் குறித்தும் கவலை வெளியிட்டார்.

❖❖❖❖❖❖❖

உச்சிமாநாடு

இந்தியா - அமெரிக்க ஒத்துழைப்பு நிலைப்பாடு அமைப்பு சார்பிலான இந்திய தலைமைத்துவ உச்சிமாநாடு 2024, புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இருதரப்பு வர்த்தகம், விநியோக சங்கிலி, குறைகடத்தி முதலீடுகள், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை இதில் இடம்பெறும்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அண்மையில் அமெரிக்காவில் பங்கேற்ற குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டின் தொடர்ச்சியாக இம்மாநாடு நடைபெறுகிறது.

பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தி, எரிசக்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச்சென்று, தடையற்ற வெளிப்படையான இந்தோ பசிபிக் பிராந்தியத்தை நோக்கமாக கொண்டு இந்த மாநாட்டில் விவாதங்கள் இடம்பெறுகின்றன.

மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ்கோயல், திரு. தர்மேந்திர பிரதான், திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖

ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் புதிய அரசு அமைய வழிகோலும் வகையில், அங்கு குடியரசு தலைவர் ஆட்சி திரும்பப் பெறப்பட்டது. இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

முன்னதாக ஸ்ரீநகரில் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹாவை சந்தித்த தேசிய மாநாட்டு கட்சி துணைத்தலைவர் திரு. உமர் அப்துல்லா, ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் முதல்முறையாக புதிய அரசு அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

## Kjyikr;rh; - kio

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கையை அடுத்து, நாளை பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறை உயர் அதிகாரிகளுடன் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, நாளைமுதல் வரும் 18-ம் தேதிவரை தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களை வீட்டில் இருந்தே பணிபுரிய அறிவுறுத்த வேண்டும் எனவும், கேட்டுக்கொண்டார்.

தேசிய பேரிடர் மீட்பு படை, மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினர், வானிலை அறிவிப்பை முன்கூட்டியே அறிந்து அப்பகுதிகளில் மீட்புபடை உபகரணங்களுடன் தயார்நிலையில் நிறுத்தப்பட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

கே.என். நேரு

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த பருவமழையின் போது மழைநீர் தேங்கிய இடங்கள் கண்டறியப்பட்டு இந்த ஆண்டு மழைநீர் தேங்காமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖

வானிலை

இதனிடையே வடகிழக்கு பருவமழை நாளை தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ராமநாதபுரம் தொடங்கி திருவள்ளூர் மாவட்டம் வரை அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

பொன்முடி

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதிகளில் 12 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், 172 பகுதிகள் தாழ்வான பகுதிகளாக கண்டறியப்பட்டு பாதுகாப்பு பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதாக கூறினார்.

041 46 22 32 65 என்ற தொலைபேசி எண்ணில் மக்கள் தொடர்பு கொண்டு மழை தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

மழை

கடலூர் மாவட்டம் குறிஞ்சிபாடி, பன்ருட்டி, திட்டக்குடி, விருத்தாச்சலம், நெய்வேலி பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

இதனிடையே வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மாவட்ட நிர்வாகம் முழுவீச்சில் மேற்கொண்டுள்ளது.

வருவாய், உள்ளாட்சி, மின்சாரம், தீயணைப்பு, நெடுஞ்சாலைத்துறைகள் தயார் நிலையில் உள்ளதாகவும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், செவிலிமேடு, குருவிமலை, உள்ளிட்ட பகுதிகளில் இன்று அதிகாலை முதல் பரவலாக மழை பெய்து வருவதாகவும்,

செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே நாமக்கல் மாவட்டம் எலச்சிபாளையம் அருகே திருமணி முத்தாற்றில் விவசாயி ஒருவர் மழைவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்தார்.

❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் 508 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் விரைவில் திறக்கப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இதய சிகிச்சைக்கான அதிநவீன கேத் லேப் திறக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

50 படுக்கைகள் கொண்ட தரம் மேம்படுத்தப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு அடுத்த ஆண்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசியஅவர், பருவமழை நோய் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் ஆயிரம் இடங்களில் நாளை மழைக்கால சிறப்பு மருத்துவமுகாம்கள் நடத்தப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மகேஷ் பொய்யாமொழி

தமிழகத்தில் 10, 11, 12-ம் வகுப்பிற்கான பொதுத்தேர்வு தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோவையில் இதற்கான அட்டவணையை இன்று வெளியிட்டு பேசிய மாநில பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் வரும் மார்ச் 3-ம் தேதி தொடங்கி 25-ம் தேதிவரை நடைபெற உள்ளதாக தெரிவித்துள்ளார்.

கோவை ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் 10-ம் வகுப்பிற்கு மார்ச் 28-ம் தேதியும்,

11-ம் வகுப்பிற்கு மார்ச் 5-ம் தேதியும் பொதுத்தேர்வுகள் தொடங்கும் என்றார்.

இதனிடையே 10, 11-ம் வகுப்பிற்கான பொதுத்தேர்வு முடிவுகள் மே 19-ம் தேதியும்

12-ம் வகுப்பிற்கான தேர்வு முடிவுகள் மே 9-ம் தேதியும் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கஜகஸ்தானில் நடைபெறும் அல்மாட்டி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரித்விக் போலிபள்ளி, அர்ஜுன்கதே இணை இன்று இத்தாலி, பின்லாந்து இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.